வடமராட்சிக்கான உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 94

செவ்வாய்க்கிழமை 28 பெப்ரவரி 2023 | மாசி 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

பட்ஜெட் மீது 2ஆவது வாக்கெடுப்பு

# யாழ். மாநகரசபை இன்று கலையுமா?

யாழ்ப்பாணம், பெப்ரவரி 28

யாழ். மாநகரசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாவது முன்வைப்பும், வாக்கெடுப்பும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. மீண்டும் ஆட்சிக்கு வந்து சரியாக ஒரு மாதகாலத்தில் தனது முதலாவது பட்ஜெட் தோற்கடிக்கப்பட்ட நிலையில் மாநகர முதல்வர் ஆர்னோல்ட் வாக்கெடுப்பில் வென்று இன்னும் 20 நாள்களுக்கு ஆட்சியைத் தொடர அனுமதிக்கப்படுவாரா? அல்லது மாநகர சபை கலையுமா? என்பது இன்றைய வரவு – செலவுத் திட்டத்தின் முடிவில் தெரியவரும். »11

முச்சந்தி முரளி



"ஒரு மாநகரசபையிலேயே இவ்வளவு பிடுங்குப்பாடு எண்டால், ஒருவேளை தனிநாடு கிடைச்சிருந்தால்...?"

போதனா மருத்துவக் கழிவை

## எரிப்பதற்கு எதிர்ப்பு: போராட்டம் பிசுபிசுப்பு!

வவுனியா, பெப். 28
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகளை வவுனியா - ஓமந்தையில் அமைந்துள்ள எரியூட்டல் நிலையத்தில் »11

## சி.ஐ.டி. என்று தெரிவித்து 38 பவுண் நகை கொள்ளை

யாழ்ப்பாணம், பெப். 28
சி.ஐ.டி. என்று தன்னை அடையாளப்படுத்திய நபரொருவர் 38 பவுண் நகைகளை அபகரித்துச் சென்ற சம்பவம் கோப்பாய் பொலிஸ் »11

## போதைப் பொருளுடன் இருவர் நேற்றுக் கைது

வவுனியா, பெப். 28
10 கிராம் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். »11

## பொலிஸாரின் தாக்குதலில் ஜே.வி.பி. வேட்பாளர் பலி!

கொழும்பு, பெப். 28
அரசுக்கு எதிராகக் கொழும்பில் நேற்றுமுன்தினம் ஜே.வி.பியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் »11

## கிணற்றுக்குள்ளிருந்து முதியவர் சடலமாக மீட்பு!

## மூளைக் காய்ச்சலால் சிறுமியொருவர் சாவு!

## 45 நாள்களேயான சிசு பரிதாபப் பலி!

விரிவுகள்:- பக் - 11இல்



## கிணற்றில் கூட்டமாக விழுந்த யானைகள்!

பலரது முயற்சியால் பத்திரமாக மீட்பு

வவுனியா, பெப். 28
வவுனியா- செட்டிகுளம் பகுதியிலுள்ள விவசாயக் கிணற்றுக்குள் யானைகள் நேற்றுக் கூட்டமாக விழுந்த நிலையில், அவை பலரது முயற்சியால் பத்திரமாக மீட்கப்பட்டன. விவசாயக் கிணற்றுக்குள் யானைகள் வீழ்ந்துகிடப்பதை அவதானித்த கிராம »11

## கடை உடைத்து பணம் திருட்டு!

சங்கானையில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 28
வலி. மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட சங்கானை சந்தைக்குள் உள்ள கடையொன்று உடைக்கப்பட்டு 80 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது. »11






## தேர்தல் பிற்போடப்பட்டமை திட்டமிடப்பட்ட சூழ்ச்சியே!

நடவடிக்கைக்குத் தயார்; ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 28
தேர்தலைப் பிற்போடும் அரசின் சூழ்ச்சித் திட்டத்துக்குத் [illegible] நிற்கும் நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிராக சகலவிதமான [illegible] »11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியிலிருந்து தப்பவே 13 ஐ கையிலெடுக்கிறது அரசு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப் 28

அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நெருக்கடிகள் தோன்றுகின்ற பொழுது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று கூறுவதும் அதைச் சிங்கள இனவாத சக்திகள் எதிர்ப்பதும் பின்னர் திசைதிருப்பும் நோக்கில் செயற்படுவதும் இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்பவர்களின் வழக்கமாகிவிட்டது.

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

தென்னிலங்கை அரசியல் சமூகமும் பௌத்த மதகுருமார்களும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்ந்தால் மாத்திரமே இந்த நாடு முன்னேற்றமடையும் என்பதை ஏற்க மறுத்து, தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தொடர்ந்தும் தமிழர் விரோதப்போக்கைக் கடைப்பிடிப்பது இந்த நாட்டின் நெருக்கடிக்குத் தீர்வாகாது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் பேசியபொழுது, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவைக் கோரினார். 13 ஐப் பற்றிப் பேசிவரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 13 ஆவது திருத்தத்துக்கு மேலே சென்று அதை நடைமுறைப்படுத்துவதற்குத் தான் தயார் எனக் கூறினார். சிங்கள இனவாதிகளின் தூண்டுதலின் பேரில் பௌத்த பிக்குகளை உள்ளடக்கிய இனவாதக்குழுக்கள் சில 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றக்கூடாது என்று போராட்டம் நடத்தின. அவர்களுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சில இனவாத சக்திகளான விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில, சரத்வீரசேகர போன்றோரும் குரல் கொடுத்தனர். முன்னர் இதற்கு ஆதரவு தெரிவித்த மஹிந்த ராஜபக்ச இப்பொழுது 13 ஐ நிறைவேற்றத் தேவையில்லை என்று சிங்கள ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத்தில் உள்ள இந்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி யாரிடமும் அங்கீகாரமோ அனுமதியோ பெறவேண்டிய தேவையில்லை. 1988 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, இலங்கையில் மாகாணசபைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்கு உரித்தான அதிகாரங்களில் சில கொடுக்கப்பட்டிருப்பதும் சில கொடுக்கப்படாமலிருப்பதும் நிதர்சனமான உண்மையாகும். நாங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறே கோருகின்றோம்.

ஆனால் இலங்கையின் அரசியல் சாசனத்தில் உள்ள இந்த விடயங்களை சிங்களத் தரப்பில் இருக்கக் கூடிய குறுகிய அரசியல் இலாபம் கொண்ட கட்சிகள் இதனை மறுதலிப்பதும் அதற்கு எதிராகப் போராடுவதும் புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனால் தமிழ்த் தரப்பில் இயங்குகின்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போன்றவர்கள் அதே சிங்கள இனவாதக் குழுக்கள் போல் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராகச் செயற்படுவதும் எந்த வகையில் தமிழ் மக்களுக்கு அனுகூலமாக இருக்கும் என்பதை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

ஒரு மாற்று ஏற்பாடு இல்லாமல், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் காரணமாக உருவாக்கப்பட்ட மாகாணசபைகளை நிராகரிப்பதும் அதனை அரசியல் சாசனத்திலிருந்து தூக்கியெறிய வேண்டும் என்று சொல்வதும் தமிழ் மக்களுக்குக் கிடைத்தவற்றையும் இல்லாமல் செய்யக்கூடிய அறிவீலித்தனமான செயலாகும்- என்றுள்ளது. (எ-இ)

# சிறுவர் காப்பகத்திலிருந்த 11 சிறுமிகள் துஷ்பிரயோகம்

## 60 வயதான சந்தேகநபர் கைது

கொழும்பு, பெப். 28

சிறுவர் இல்லமொன்றில் 11 சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இரத்தினபுரி, ரக்வானவில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனத்தால் நடத்தப்பட்ட குறித்த சிறுவர் இல்லத்தின் பராமரிப்பாளர் ஒருவரின் கணவரான 60 வயதுடைய சந்தேகநபரே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரல்மடுல்ல நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

# தவறான முடிவெடுத்து இளைஞன் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

தவறான முடிவெடுத்து இளைஞர் ஒருவர் உயிரை மாய்த்துள்ளார். இந்தச் சம்பவம் கொக்குவில் கிழக்குப் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

குறித்த இளைஞர் ஆறுமாத காலத்துக்கு முன்னர் விபத்துக்குள்ளாகி மனநலம் சற்று குன்றிய நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

நேற்றுக்காலை உயிரிழந்தவரின் குடும்பத்தினர் வெளியில் சென்ற நிலையில் வயோதிபப் பெண்ணொருவரே வீட்டில் இருந்துள்ளார்.

அவர் தேநீர் கொண்டு சென்ற வேளையே நபர் தூக்கில் தொங்கியதை அவதானித்தார். அதனையடுத்து கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், நபரின் உடலை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். (ஒ-14,125)

# கடன் மறுசீரமைப்பு தீர்மானம் மார்ச்சில்

## செஹான் சேமசிங்க தகவல்

கொழும்பு, பெப்.28

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் ஏற்றுக்கொள்ளக் கூடிய சாதகமான ஒரு தீர்மானம் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குள் அறிவிக்கப்படும் என்று சீனா தெரிவித்துள்ளது. சர்வதேச நாணயநிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள அரசாங்கம் மேற்கொண்டுள்ள பேச்சுத் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனாப்பெருந்தொற்றுத் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை போன்ற குறைந்த வருமானம் பெறும் நாடுகள் எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பாதிப்பு மற்றும் பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கு வழங்கப்படும் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் அமெரிக்கா மற்றும் சீன நிதித்துறை அதிகாரிகளுக்கு இடையில் விசேட பேச்சுவார்த்தை கடந்தவாரம் இந்தியாவில் இடம்பெற்ற ஜி-20 மாநாட்டில் இடம்பெற்றுள்ளது. அதன் இரண்டாம் கட்டத்தின்போது இலங்கை உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறும் நாடுகள் பெற்றுக் கொண்டுள்ள சீனக் கடன் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீனா இரண்டு வருட கால அவகாசம் வழங்க எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாகத் தீவிரமாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான ஒரு தீர்மானத்தை மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாக சீன அரசாங்கம் இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இலங்கையின்பிரதானநிலைகடன்வழங்குநராக சீனா விளங்குவதால் சர்வதேச நாணயநிதியத்தின் கடன் ஒத்துழைப்புக்கு சீனாவின் உத்தரவாதம் அவசியமாகும். சர்வதேச நாணயநிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் இந்தியா மற்றும் சீனாவின் ஒத்துழைப்பு சாதகமாகக் காணப்படுகிறது. சர்வதேச நாணயநிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்தால் இலங்கையின் அரச கடன் நிலைபேறான தன்மையில் காணப்படும். அதனைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணலாம் - என்றார். (எ-இ)



# 41 கிலோ கேரளக் கஞ்சா மன்னாரில் ஒருவர் கைது

மன்னார், பெப். 28

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பகுதியில் 41 கிலோ கேரளக் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய இந் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. [illegible]ங்கண்டல் வண்ணாகுளம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 41 கிலோ 620 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரையும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவையும் மன்னார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பொ.ப.ரத்நாயக தெரிவித்தார். (ச-213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைக் கழிவுகள் மக்கள் அச்சம் வேண்டாம்

## யாழ். போதனாவின் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 28

எமது மருத்துவமனைக்கென தனியான எரியூட்டி இயந்திரம் ஒன்றைப் பெற்று மருத்துவமனைக்கு அண்மையாக உள்ள இடத்தில் அதனைப் பொருத்தி மருத்துவமனைக் கழிவுகளை எரியூட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதுவரை தனியார் நிறுவனங்கள் ஊடாக மருத்துவக் கழிவுகள் எரிக்கப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை.




இவ்வாறு யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகள் அகற்றல் செயற்பாடு குறித்து நேற்று திங்கட்கிழமை மருத்துவமனையில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் யாழ்.போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகள் பாதுகாப்பான முறையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையிலுள்ள எரியூட்டியில் எரிக்கப்பட்டு வந்தன.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா காரணமாக கொரோனா நோயாளிகள் பாவிக்கும் அனைத்து உடைமைகளும் எரியூட்ட வேண்டிய நிலை காணப்பட்டது.

இதனால் எரியூட்டி இயந்திரப் பாவனை மற்றும் அவற்றில் ஏற்பட்ட திருத்த வேலை காரணமாக தொடந்து தெல்லிப்பழையில் எரியூட்ட இடர்பாடான நிலை உருவாகியுள்ளது.

மருத்துவமனைக்கென நாம் தனியான ஓர் எரியூட்டி இயந்திரத்தைப் பெற்று மருத்துவமனைக்கு அண்மையாகவுள்ள கோம்பயன் இந்து மயானப் பகுதியில் யாழ்.மாநகர சபையுடன் கலந்துரையாடி செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம்.

ஆயினும் கோம்பய்ன்மணல் பகுதியானது எரியூட்டி அமைப்பதற்கு பொருத்தமான இடம் அல்ல. மாற்று இடமொன்றைத் தெரிவு செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடன் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. இந்த நடவடிக்கை கைகூடும்வரை மருத்துவக் கழிவ்கனை தேங்க விடாது - மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு தனியார் நிறுவனங்களிடம் கொடுத்து எரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மக்கள் மருத்துவக் கழிவுகள் தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை. வழமைபோன்று மருத்துவமனையின் சேவைகள் அனைத்தும் இடம்பெறுகின்றன. பொதுமக்கள் நாளாந்தச் செயற்பாடுகளை வழமைபோல் முன்னெடுக்க முடியும் - என்றார். (ச-26,20)

## யாழ்.போதனாவுக்குள் நுழைந்து வன்முறைக் கும்பல் அட்டூழியம்

### காவலாளி மீது வாள்வெட்டு முயற்சி

யாழ்.போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பலொன்று மருத்துவமனையின் காவலாளிமீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்த முயற்சித்ததுடன் அங்கிருந்த பொருள்களையும் சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: யாழ்.போதனா மருத்துவமனையின் பிரேத அறைப் பக்கமுள்ள நுழைவாயில் அருகில் பட்டா ரக வாகனத்தில் வந்த சிலர் வாயில் கதவால் ஏறிக் குதித்து மருத்துவமனைக்குள் நுழைய முயற்சித்தனர்.

அதனை அவதானித்த காவலாளி அவர்களை தடுக்க முயன்றபோது காவலாளி மீது தாக்குதல் நடத்தியதுடன் பட்டா வாகனத்திலிருந்து வாளை எடுத்துவந்து வெட்டுவதற்கு முயற்சித்துள்ளனர். சுதாகரித்துக்கொண்ட காவலாளி அவர்களைத் தடுத்த நிலையில் அங்கிருந்த கதிரை, மேசை உள்ளிட்டவற்றை வாளால் வெட்டி சேதப்படுத்திவிட்டு வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சந்தேகநபர்களில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-26,20)

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன சிறப்பாகச் செயற்படுகிறார்

### பாராட்டுகிறது பெரமுன

கொழும்பு, பெப். 28

பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் மொட்டுக் கட்சிக்குள் எவ்விதக் கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. தற்போதைய பிரதமர் சிறப்பாகச் செயற்பட்டுவருகின்றார் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டு, அரசியல் ரீதியில் வங்குரோத்தடைந்துள்ள சன்ன ஜயசுமனவே, இப்படியொரு கருத்தை சமூகமயப்படுத்தினார். அதில் எவ்வித உண்மையும் இல்லை.

மஹிந்தவை பிரதமராக்க வேண்டுமென்றால் அதனை மக்கள் செய்வார்கள். கட்சிக்குள் அவருக்கு ஆதரவாளர்களும் உள்ளனர். எனினும், பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாக எவ்வித கலந்துரையாடலும் கட்சிக்குள் இடம்பெறவில்லை. தற்போதைய பிரதமருடன் எமக்கு சிறந்த நல்லுறவு உள்ளது - என்றார். (ஒ-44)

## விண்ணப்பம் கோரல்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் மற்றும் இளங்கலைஞர் விருதுகளுக்கும், 2022 ஆம் ஆண்டு பிரசுரமான நூல்கள் தெரிவு மற்றும் நூல்கள் கொள்வனவு ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் கலைக்குரிசில் விருதுக்கும், 40 வயதுக்குட்பட்ட கலைஞர்கள் இளங்கலைஞர் விருதுக்கும் விண்ணப்பிக்கலாம். அத்துடன் 2022 ஆம் ஆண்டு வெளியான நூல்களில் சிறந்த நூல் தெரிவும், அவ்வாறான நூல்கள் கொள்வனவும் செய்யப்படவுள்ளன. இவற்றுக்கான விண்ணப்பப்படிவத்தை பிரதேசகலாசாரப் பிரிவில் பெற்று எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். (ஒ-14,9)

## பனிப்புலம் பகுதியில் கார் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 28

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம் ஐயப்பன் கோயிலிலுக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது இனந்தெரியாத கும்பல் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்குதல் நடத்தியுள்ளது. இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பல் இந்தத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது. தாக்குதலில் கார் சேதமடைந்துள்ளது.

இது தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,135)

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கான 3 வருட நிலுவை செலுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 28

எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள், யாழ். மாநகரசபையினால் கோரப்பட்டுள்ள விற்பனை மேம்படுத்தல் வரி முற்பணத்தைச் செலுத்தாவிடின் நிகழ்வுக்கான அனுமதியை வழங்குவதில்லை என்றும், மாநகரசபையால் வழங்கப்படும் நலச் சேவைகளை வழங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிதிக் குழு, மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோர்ல்ட் தலைமையில் நேற்றுக் கூடியது. இதன்போது, சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஏற்பாட்டாளர்களால் வரிச் சலுகைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டமை கூட்டத்தில் தெரியப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்த நிதிக்குழு மேற்சொன்னவாறு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் 2020, 2022 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கான விற்பனை மேம்படுத்தல் வரி மற்றும் கேளிக்கை வரி நிலுவையாகச் சுமார் 40 லட்சம் ரூபா நீண்ட காலமாகச் செலுத்தப்படவில்லை. இது தொடர்பில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நீண்ட விவாதத்தின் பின், 2019 முதல் 2022 வரையான காலப்பகுதிக்குரிய வரி நிலுவையை முழுமையாகச் செலுத்தவேண்டும் எனவும், 2023 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரி மதிப்பீட்டின் 50 வீதத்தைச் செலுத்தினால் மட்டுமே நிகழ்வுக்கான அனுமதி வழங்கப்படும் எனவும் சபை தீர்மானித்து ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்திருந்தது.

இதனையடுத்து 2022 ஆம் ஆண்டு வரையான நிலுவையான ரூபா 44 லட்சத்தைச் செலுத்தியுள்ள ஏற்பாட்டாளர்கள், 2023 ஆம் ஆண்டுக்கான வரி முற்பணத்தைச் செலுத்தாமல், வரிக் கழிவு வழங்குமாறு கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர். எனினும், வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ள வர்த்தகர்களிடம் முழுமையான கட்டணத்தை அறவிட்டுள்ள ஏற்பாட்டாளர்கள் மாநகரசபைக்குரிய வரியைச் செலுத்தப் பின்னடிப்பதால், கடந்த கால கசப்பான அனுபவங்களின் அடிப்படையில் மாநகரசபையால் கோரப்பட்டுள்ள விற்பனை மேம்படுத்தல் வரி முற்பணத்தைச் செலுத்தாவிடின் நிகழ்வுக்கான அனுமதியை வழங்குவதில்லை என்றும், மாநகரசபையால் வழங்கப்படும் நலச் சேவைகளை வழங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)




**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.


**இடபம்:** செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பேசும்போது வார்த்தைகளில் கவனமாக இருக்கவும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.


**மிதுனம் :** அதிர்ஷ்டகரமான நாள். நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.


**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.


**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமா முடிவுகளை இன்று எடுக்கலாம். சகோதர வகையில் செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி ஏற்படும்.


**துலாம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சில பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். லாபமும் மந்தமாகத்தான் இருக்கும்.


**விருச்சிகம் :** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.


**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும்.


**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணை ஆதரவாக இருப்பார். உடல் ஆரோக் கியத்தில் கவனம் தேவை.


**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிடிவாதப் போக்கு மாறும். பணவிரயத்துக்கு வாய்ப்பு உண்டு.


**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

# பாண்டிச்சேரிக்கான படகுச் சேவை உட்கட்டமைப்பு பூர்த்தி விரைவில்

## போக்குவரத்து அமைச்சர் நம்பிக்கை



கொழும்பு, பெப். 28

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் காங்கேசன்துறை - பாண்டிச்சேரிக்கான படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கு காங்கேசன்துறைமுகத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளை மார்ச் மாத இறுதிக்குள் விரைந்து முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்;

காங்கேசன்துறைக்கும் பாண்டிச்சேரிக்குமிடையிலான கப்பல் சேவை கடந்த ஜனவரி மாத மத்தியில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்து.

ஆயினும் உட்கட்டமைப்புப் பணிகள் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை.

பயணிகளை துறைமுகத்துக்கு கொண்டு செல்வதற்கும், புறப்படுவதற்குமான சேவையை வழங்குவதற்கு படகுகள் உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருக்கவேண்டும்.

அந்தவகையில் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், சுங்கம் மற்றும் குடிவரவுத் துறையினருக்கான வசதிகளும் எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

150 - 175 பயணிகளை ஏற்றக்கூடிய வேகமாகச்செல்லக்கூடிய படகு ஒன்றைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு மூன்று இந்திய நிறுவனங்கள் தயாராக உள்ளன.

இதேவேளை பலாலி விமான நிலையத்திலிருந்து தென்னிந்தியாவின் ஏனைய விமான நிலையங்களுக்கு சேவையை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது - என்றார். (ச-6)

# ரோபோக்களையும் பணிநீக்கிய கூகுள்

வொஷிங்டன், பெப். 28

உலகம் முழுவதும் பல நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களை பணிநீக்கம் செய்து வரும் நிலையில் அதற்கு ஒருபடி மேலே சென்று ரோபோக்களையும் பணிநீக்கம் செய்துள்ளது கூகுள் நிறுவனம்.

கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அலுவலக செலவுகளைக் குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

கூகுள் நிறுவனத்தில் கதவைத் திறந்துவிட; தளத்தை சுத்தம் செய்ய, குப்பைகளை அள்ள எனப் பல்வேறு பயன்பாடுகளுக்கு ரோபோக்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்தநிலையில் குறித்த பணிகளில் ஈடுபட்ட சுமார் 100க்கும் மேற்பட்ட ரோரோக்களைப் பணிநீக்கம் செய்துள்ளதாக கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-இ)

# சுற்றுலா வந்தால் 165 அமெ. டொலர்

## தாய்வான் அரசு அறிவிப்பு

தென்கிழக்கு ஆசிய நாடான தாய்வான் தங்கள் நாட் டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய வருகைதரும் சுற்றுலாவிகளுக்கு சிறப்புத் தொகை அல்லது ஊக்கத்தொகை வழங்கத் தாய்வான் அரசு அறிவித்துள்ளது.

தாய்வான் அரசு இந்த ஆண்டில் 60 லட்சம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத் திட்டமிட்டுள்ளது.

அந்தவகையில் தாய்வானுக்கு சுற்றுலாவுக்கு வரும் ஒவ்வொரு பயணிக்கும் தலா 165 அமெரிக்க டொலர் அதாவது இலங்கை பணமதிப்பில் 60 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படும் என தாய்வான் அரசு அறிவித்துள்ளது. (ச-இ)

# கிறிஸ்தவர்களினது அடையாளம் யாது?

நாம் ஓர் இடத்தை அடைய இடக்குறியீட்டை அடையாளமாகக் கேட்பதுண்டு. ஒருவரை இனங்கான ஆளடையாளங்களைக் கூறுவதுண்டு. இதுபோன்று அன்று இயேசுவை நம்பவும் புரிந்துகொள்ளவும் மக்கள் வெளிஅடையாளங்களை எதிர்பார்த்தனர். கைதியாக நின்ற இயேசுவிடம் ஏரோது அரும் அடையாளங்களை எதிர்பார்த்தான். யூதரில் சிலர் இயேசு சிலுவையில் இருந்து இறங்கிவந்து இறைமகன் என்று அடையாளப்படுத்துவார் எனக் காத்திருந்தனர். ஆனால் சாவை வென்று உயிர்ப்பே தமது அடையாளமென இயேசு வெளிப்படுத்தினார்.




கிறிஸ்தவர்கள் என்று கூறும் நாம் எவ்வாறு எம்மையும் இயேசுவையும் அடையாளப்படுத்துகின்றோம்? மானிடர் வாழ்வு எப்பொழுது வலுவிழந்து துன்பத்தில் துவள்கின்றதோ அப்போது வீறு கொண்டெழுந்து உதவிடப் பாயும் உன்னத சக்தியாக நாம் எழுவதே இயேசுவின் அடையாளம். தீய வழிகளை விட்டு இரக்கச் செயல்களைத் தொடர்வதே கிறிஸ்தவத்தின் அடையாளம். மக்களைப் பிரித்து உரிமைகளை மறுத்து ஆட்சிசெய்யும் பாரபட்சத்துக்கு எதிராக ஒருங்கிணையும் போராட்டக் குரலே இயேசுவின் மனித விடுதலைக்கு அடையாளம். எமது வாழ்வே இயேசுவின் மீட்புக்கு அடையாளமாகட்டும். இந்தத் தவக்காலத்தில் தமது பாடுகள், போதனைகளின் அடையாளமாக எமது வாழ்வை அமைத்துக் கொள்வதையே இயேசு எதிர்பார்க்கின்றார். அதனைச் செயற்படுத்துவது எமது கடமையும் பொறுப்புமாகும்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

# மரண அறிவித்தல்

மண்மகிழ 1941.02.11

## கதிரேசு கந்தசாமி

கண்நெகிழ 2023.02.27



மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கதிரேசு கந்தசாமி அவர்கள் நேற்று (27.02.2023) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு சௌந்தரம் தம்பதியினரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற பூமணி தேவி அவர்களின் அன்புக் கணவரும், சரஸ்வதி, சாந்தம்மா, பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்மலிங்கம் நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், புஸ்பரஞ்சி, ஜெயறஞ்சி, குகதாசன், யசோதரன் (பிரான்ஸ்), ஜீவதாசன்(பிரான்ஸ்), பிரபாஜினி (அமரர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றுஜாந், ஸ்ரீசாந், விலோஜன், பிரியங்கா, கென்சிகா, சகானா, சமீலா,பஜீவன்,சஜீபா, பிரஜீவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.02.2023) அவரது இல்லத்தில் மு.ப.10.30 மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் குச்சப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23751)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பூனைக்கு யார் மணிகட்டுவது?

உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் 9 இல் நடக்காது என்பது உறுதியாகிவிட்டது. ஆனால் அதை அறிவிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குத் திராணியில்லை. தேர்தல் நடத்தாமைக்கான பொறுப்பு தமது தலையில் வந்து விழக்கூடாது என்பதற்கான 'பந்தடித்தலில்' ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது. இப்போது நிதியைக் கோரி நாடாளுமன்றத்துக்கு – சபாநாயகருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சித் தேர்தலை அறிவிக்க வேண்டாம் என்பதை ஆணைக்குழுவிடம் சுட்டிக்காட்டியிருந்தார். அதனை அவர் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் கூட பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றார். ஜனாதிபதியைப் பகைத்துக் கொண்டு தேர்தலை அறிவிக்கும்போது, இதற்கு ஏற்படுத்தப்படும் தடைகளை எதிர்கொள்வதற்கான மாற்று உபாயங்களை தேர்தல்கள் ஆணைக்குழு வகுத்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் தேரை இழுத்து தெருவில் கொண்டு வந்து விட்டிருக்கின்றது ஆணைக்குழு.

தேர்தலை நடத்துவதற்கான இயலுமை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இல்லை. அவர்களிடம் அதற்கான திட்டங்களும் இல்லை என்பது இப்போது வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி அதிகாரம் நாடாளுமன்றத்தில் இருக்கின்றதையும், தேர்தல்கள் ஆணைக்குழு நாடாளுமன்றத்துக்கே பொறுப்புக்கூறவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டிய பின்னர், அவசர அவசரமாகக் கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு சபாநாயகருக்கு தேர்தலை நடத்துவதற்கான நிதியை விடுவிக்குமாறு கோரி கடிதம் அனுப்புகின்றது. நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் திகதியை அறிவித்தமை கூட உரிய முறைப்படியிலானது இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கருத்தை எதிர்க்கட்சிகள் எல்லாம் மிக மோசமாக விமர்சித்திருந்தன. ஆனால், அவரது கருத்தை சவாலுக்கு உட்படுத்தவேண்டிய தேர்தல்கள் ஆணைக்குழுவோ வெறும் ஊடக அறிக்கை ஊடாக பதிலளித்துவிட்டு பேசாமல் இருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றியதற்கு அமைவாகத் தேர்தல்கள் ஆணைக்குழு சபாநாயகருக்கு கடிதம் அனுப்புகின்றதென்றால், ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த ஏனைய குற்றச்சாட்டுகளையும் சரி என்று ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது.


இவர்களின் இந்த இழுபறியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தேர்தலுக்காக சம்பளமற்ற விடுமுறையிலுள்ள அரச பணியாளர்கள்தான். தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டால் மாத்திரமே அவர்களால் பணிக்குத் திரும்பமுடியும். ஆனால், தேர்தல்கள் ஆணைக்குழுவோ, திகதியைக் குறிப்பிட்டோ திகதியைக் குறிப்பிடாமலோ தேர்தலை ஒத்திவைப்பதற்குத் தயாராக இல்லை. அந்தப் பழி தம்மீது விழுந்து விடக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கின்றது.

அதனால்தான் தாம் தப்புவதற்கான இறுதி எத்தனமாக சபாநாயகருக்கு கடிதம் அனுப்பியுள்ளது ஆணைக்குழு. அந்தக் கடிதத்துக்கான பதில் மார்ச் 3ஆம் திகதிக்குள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் மார்ச் 3ஆம் திகதி புதிய தேர்தல் திகதியை அறிவிப்போம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை கூறியது. சபாநாயகர் பதில் கடிதம் அனுப்பாவிட்டால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அடுத்த நடவடிக்கை என்ன? சபாநாயகர் தன்னால் நிதியை விடுவிக்க முடியவில்லை என்று பதிலளித்தால் ஆணைக்குழு என்ன செய்யப்போகின்றது? மீண்டும் இன்னொரு திகதியில் தேர்தலை அறிவிப்போம் என்று மார்ச் 3ஆம் திகதி சொல்லப்போகின்றதா?

தேர்தல்கள் ஆணைக்குழு திடமான முடிவெடுக்கவேண்டும். ஆனால் அவர்கள் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டு, அரசாங்கத்தின் முகத்தைத் தோலுரிப்பதற்குப் பதிலாக தங்களைத் தாங்களே சிறுமைப்படுத்தியுள்ளனர்.

நாளொரு நல்வார்த்தை

"பிறரிடம் நீ எந்தக் குணத்தை வெறுக்கிறாயோ. அந்தக் குணத்தை உன்னிடம் வைத்துக் கொள்ளாதே"
– லெனின்



குருந்தூர்மலையில்

## நீதிமன்ற உத்தரவை மீறி கட்டுமானம் உறுதிப்படுத்தினர் தமிழ் எம்.பி.க்கள்

முல்லைத்தீவு, பெப்.28

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் இரவு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் அங்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

நீதிமன்றக் கட்டளையை மீறி இரவு வேளைகளில் விகாரையின் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், இராணுவத்தினர் அந்தக் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படும் நிலையில், நேற்றுமுன்தினம் இரவு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் அங்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

குருந்தூர்மலையின் கீழ் பகுதியில் ஏராளமான சுண்ணாம்பு பைக்கற்றுக்களும் கட்டுமானப் பொருள்களும் காணப்பட்டுள்ளன. இராணுவப் பிரசன்னமும் அதிகமாகக் காணப்பட்டுள்ளது. சுமார் ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் தங்குவதற்கான வசதிகளுடன் கட்டில்கள் போடப்பட்டு மின்சார வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அங்கு காணப்பட்டுள்ளன.

குருந்தூர் குளத்தில் இராணுவத்தை தவிர வேறு யாரும் மீன்பிடிக்கவோ குளத்துக்குள் பிரவேசிக்கவோ முடியாத நிலையில், பெருவாரியான மீன்கள் பிடிக்கப்பட்டு கருவாடாக்கி கொண்டு செல்லுகின்ற செயற்பாடுகளும் இராணுவத்தால் மேற்கொள்ளப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தீயில் சுடப்பட்டுக்கொண்டிருக்கின்ற குளத்து மீன்களும் ஏற்கனவே வற்றலாக்கப்பட்ட கருவாடுகளும் அங்கு காணப்பட்டுள்ளன. (எ-19)

## உகண்டாவில் டொலர்: மறுக்கின்றார் நாமல்

கொழும்பு, பெப்.28

ராஜபக்சர்கள் விமானத்தில் டொலரை நிரப்பி உகண்டாவுக்குக் கடத்தினர் என்று கூறப்படும் குற்றச்சாட்டு அப்பட்டமான பொய் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது இந்தக் குற்றச்சாட்டை யாராவது நிரூபித்து அந்தப் பணத்தை இலங்கைக்குக் கொண்டு வந்தால், அந்தப் பணத்தில் இலங்கையில் உள்ள அனைத்துக் கடன்களையும் அடைத்து விடலாம்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் ராஜபக்சக்களால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் கொண்டுவருவோம் எனக் கூறினார்கள். ஆனால் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது அவ்வாறான எதையும் கண்டு பிடிக்கமுடியவில்லை.

உலகில் எங்கும் ராஜபக்சகளுக்கு இது போன்ற கணக்குகள் உள்ளன என்று இதுவரை எந்தத் தகவலும் கண்டுபிடிக்கப்படவில்லை என தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கூறியிருக்கின்றார் - என்றார். (எ-இ)

நாளை
01.03.2023
புதன்கிழமை
மாசி 17
சுபநேரம் : 04.58 - 06.28
ராகுகாலம் : 12.28 - 01.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு

மலர்வு 13 - 06 - 1954



உதிர்வு 12 - 03 - 2022

கடந்த 12.03.2022 இல் இறைபதமெய்திய
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சின்னவன் சுப்பிரமணியம்

(சிறுப்பிட்டி எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்)

*நல்லவர் பெயர் விளங்கும் அவனியிலே*
*அன்பானவனே உன் பெயரும் விளங்கும்!!*
*கல்மனம் படைத்த காலனவன் கவர்ந்தானோ உன் உயிரை*
*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.*

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்தி பிரார்த்தனை இன்று (28.02.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கலைஒளி வீதி,**
**சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.**

(CS 23740) (3/6)

**குடும்பத்தினர்**
**077 060 1232**

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 • 07 • 1956



மறைவு 27 • 02 • 2023

## திருமதி பரமேஸ்வரன் மனோன்மணி

காரைநகர், தட்டாம்புலம் வலந்தலையைப் பிறப்பிடமாகவும், இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரன் மனோன்மணி நேற்று (27.02.2023) திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் - அருளாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகளும், மயூரன், கயூகரன், அகலியா (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவமனோகரி, வைதேகி, பிரதீஸ் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், தைனிகா, கவிநயன், சர்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், கதிரைமலைநாதன், காலஞ்சென்ற கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மகேஸ்வரன், விக்னேஸ்வரன் (UK), குகேஸ்வரன், யோகேஸ்வரன், கனகாம்பிகை, கமலாம்பிகை, வேதாம்பிகை, அனுசியா, இராசலக்ஸ்மி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இடைப்பிட்டி,**
**காரைநகர்.**

(CS/23670)4.6

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 749 5666, 077 290 4158**

உ
சிவமயம்

# மு/ யோகபுரம் மகா வித்தியாலயம்
## (தேசிய பாடசாலை)

# வைர விழா அழைப்பு



**இடம் : பாடசாலை வளாகம்**
**காலம் : 01.03.2023 புதன்கிழமை**
**நேரம் : அமர்வு - 01**
**முற்பகல் 9.00 மணி – பிற்பகல் 12.30 மணி**
**அமர்வு - 02**
**பிற்பகல் 2.00 மணி –பிற்பகல் 6.30 மணி**

**"வைரநதி" நூல் வெளியீடு**

**"வைர இழை இசை " இசைத்தட்டு வெளியீடு**

ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்கள் கௌரவிப்பு
மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

**இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு**
**அன்புரிமையுடன் அழைத்து நிற்கின்றோம்.**

பாடசாலைச் சமூகம்
மு/யோகபுரம் மகா வித்தியாலயம்
(தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி தனலட்சுமி சபாரத்தினம் (மணி)

உரும்பிராய் கிழக்கு முருகன் வீதியை பிறப்பிடமாகவும் கனடா மிசிசாகாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி சபாரத்தினம் (மணி) அவர்கள் கடந்த (25.02.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளாரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபாரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, சண்முகநாதன் (police officer), நவலட்சுமி மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகாம்பிகை (பவானி - சுவிஸ் லாந்து), மகாகிஷ்னகுமார் (கிரி - கனடா), லலிதாம்பிகை (லலி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன், நிதி, சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், தெய்வானைப்பிள்ளை (பவளம்), தவராஜன், இராசரத்தினம், முருகேசு மற்றும் கனகரத்தினம், திருச்செல்வம், பரமேஸ்வரி ஆகியோயின் அன்பு மைத்துனியும், விதினா, கனிஷா, பவிசன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், சுபீஷ், விதுஷா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 01/Mar /2023, 5:00 PM :9.00 PM வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் மறுநாள் காலை 8am - 10am நடைபெற்று, st john's Dixie cemetery & crematorium, 737 Dundas St East, Mississauga, L4Y2B5 ONT, CANADA தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**தகவல்: சண்முகநாதன் முகுந்தன் (ஆசிரியர் மருமகன், இணுவில்)**
**தொடர்புகளுக்கு பிள்ளைகள் : பவானி (மகள்) : 0041788570124**
**கிரி (மகன்) : 0014169033099, லலி (மகள்) : 00447977816126**
**நிதி (மருமகள்) :0014162199894** (CR 39284) (3/6)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27.10.1948 மறைவு 27.02.2023

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஸ்தாபகரும், தலைவருமாக இருந்து மன்றத்தின் ஊடாக கலைப் பணிக்கு அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றிவரும் **திரு.நடராஜா சோதிநாதன்** அவர்கள் பாசமிகுத் தாயார்

## திருமதி நடராஜா தேவராணி

அவர்கள் காலமானதை அறிந்து நாம் ஆழ்ந்த கவலையடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத தில்லைக் கூத்தனின் திருவடி சேர நாம் அனைவரும் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்.**
**பதிவாளர், ஆசிரியர்கள், மாணவர்கள்-(யாழ் கிளை)**

(CR 39334)1-6

# மரண அறிவித்தல்



## திருமதி பத்மநாதன் வனஜா

**தோற்றம்:01.10.1952 மறைவு:26.02.2023**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கொழும்புத் துறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் வனஜா நேற்றுமுன்தினம் (26.02. 2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார்ப்பிள்ளை, சின்னம்மா தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், பவளமலர், ரோஜாரமணி, உதயகுமார், உதயகரன் சதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், வனிதா (கனடா), வசந்தா, ஸ்ரீதரன், சபேசன், வரதன் (ஜேர்மன்), வதனா (கனடா) ஆகியோரின் சகோதரியும் ஜெயஸ்ரீ, விஜய பாஸ்கர், விஜிதா, குமுதா, தர்சிகா ஆகியோரின் மாமியாரும், விஜயசாங்கர், வினோத்குமார், ஜினோ, ஜலஸ்டிக்கா, ஆஷிகா, யதுசிகா, தர்சனா, யுதர்சன், ஜெகதீப்ஃ, யஹானா, யுஹான் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று( 28.02.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு துண்டி இந்து மயாத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**335, பிரதானவீதி,**
**கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## இல்ல மெய்வல்லுநர் மரதன் ஓட்டப்போட்டி

கிளிநொச்சி, பெப். 27
தருமபுரம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வின் மரதன் ஓட்டப்போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.
ஆண்களுக்கான மரதன் கல்லூரி முன்றிலில் இருந்து தேராவில் சந்திவரை 13 கிலோமீற்றர் சென்றடைந்து அங்கிருந்து மீண்டும் தருமபுரம் மத்திய கல்லூரியை வந்தடைந்தது. பெண்களுக்கான மரதன், தேராவில் சந்தியிலிருந்து கல்லூரி நோக்கி 6.5 கிலோமீற்றர் தூரம் கொண்டதாக இடம்பெற்றது. மரதன் ஓட்டத்தில் 250 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர்.
(ம-14,113)



# மரண அறிவித்தல்



## லீயோ யோசப் றூபி மொனிக்கா (றூபி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மத்திய கிழக்கு வீதி, குருநகர் மற்றும் சுவாமியார் புதுவீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லீயோ யோசப் றூபி மொனிக்கா (றூபி) நேற்று (27.02.2023) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின், முத்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ் சென்றவர்களான யோசப் செல்வரட்ணம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற யோசப் லீயோ அவர்களின் பாசமிகு மனைவியும், லங்கேஸ்வரி, விமலேஸ்வரி (கனடா), லங்கேஸ்வரன் (பிரான்ஸ்), லோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புநிறை தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 61 79 122** (CS 23747)1-6

தகவல்:
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## கந்தையா தியாகலிங்கம்

தோற்றம் 09.03.1959 மறைவு 26.02.2023

இல.10, சட்டநாதர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப் பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல. 97/01, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தியாகலிங்கம் கடந்த (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரபிள்ளை கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவியின் அன்புக் கணவரும், நிசானின் அன்புத் தந்தையும் ஆவார்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**திருமதி குணரட்ணம் ஆனந்தலட்சுமி.**
**(சகோதரி - பிரான்ஸ்)**
(CS/23739)4-6
**திரு.திருமதி சபாபதிப்பிள்ளை (சகோதரர்)**
**077 581 1000**

## தவறவிடப்பட்டுள்ளது

தங்க மோதிரம் மூன்று தவறவிடப் பட்டுள்ளது. ஸ்ரான்லி றோட் எல்.பி. பினான்ஸ் முன்பாக இருந்து பலாலி றோட் இலுப்பையடி சந்தி வரை உள்ள இடத்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.
சன்மானம் வழங்கப்படும்.

**ஹயனி காந்தன்**
**076 680 1484**


NEC
Empowering Education to Inspire Students
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

A/L DAY & 2023,2024

வர்த்தகம்,கலை பிரிவு - 2 ஆரம்பம்
25.02.2023 சனி காலை 8 மணி

| வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம் | |
|---|---|
| கணக்கீடு | K.பாலகஜன் |
| பொருளியல் | S.ஜெயக்குமார் |
| வணிகக்கல்வி | S.K.பாலசபேஷ் |
| ICT | V.நிரோஜன் |
| **கலைப் பிரிவு சிரேஸ்ட ஆசிரியர் குழாம்** | |
| தமிழ் | T.S.குகன் |
| அரசியல் | N.பாபு |
| அளவையியல் | S.பவன் |
| வரலாறு | N.S.தர்மீகன் |
| புவியியல் | S.சபரிதன் |
| இந்துநாகரிகம் | K.கமலதாஸ் |
| ஊடகம் | M.Y.கோணேஸ் |
| கிறிஸ்தவ நாகரிகம் | T.மயூரன் |
| மனைப் பொருளியல் | S.மஜீபன் |

அனுமதிகளை நேரடியாக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
அலுவலக தொடர்பு-0765350999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக
மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 80 ரூபாய்.
077 334 1281 (22926) 4.6)

# காரைநகர் அபிவிருத்திச்சபை
## பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

**இடம் : காரைநகர் சைவமகாசபை மண்டபம்**
**காலம் : 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி**
**தலைமை : திரு. இ. சிவசுப்பிரமணியம் (காரை அபிவிருத்திச்சபைத் தலைவர்)**

குறிப்பு : தொடர்ச்சியாக மூன்று பொதுக்கூட்டங்கள் (02.10.2022, 20.11.2022, 29.01.2023) கூட்டப்பட்டு நிறைவேற்றெண் (கோரம்) இல்லாமையினால் புதிய நிர்வாகத்தினை தெரிவு செய்ய முடியவில்லை. எனவே தொடர்ந்து மூன்று பொதுக் கூட்டங்களுக்கு அங்கத்தவராகிய தாங்கள் வருகை தராதவிடத்து தங்கள் உறுப்புரிமை தற்காலிகமாக காலாவதியானதாக கருதும் படி பிரதேச செயலகத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே எதிர்வரும் பொதுக்கூட்டத்தில் தாங்கள் பங்குபற்றாத விடத்து தங்களது உறுப்புரிமை தற்காலிகமாக காலாவதியானதாக கருதப்பட்டு புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெறும் என்பதனை சபையின் அங்கத்தவர்களுக்கு அறியத் தருகின்றேன்.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**காரை அபிவிருத்திச்சபை, காரைநகர்.** **செயலாளர்**
**28.02.2023**
(CS 23742)(3/6)

# மரண அறிவித்தல்

## கிருஸ்ணமோகன் சிவஞானசோதி



கைதடி மேற்கு கைதடியை பிறப்பிட மாகவும், வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணமோகன் சிவஞானசோதி (ஆசிரியர் யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்) அவர்கள் நேற்று (27.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சுந்தரலிங்கம் ஜெகசோதி ஆகியோரின் அன்பு மருமகளும், கிருஸ்ண மோகனின் அன்பு மனைவியும், சிவநேசன் (ஜேர்மனி), சிவானந்தன் (ஜேர்மனி), சிவஞானேஸ்வரி (சுவிஸ்) ஆகியேரின் பாசமிகு சகோதரியும், கோபிகா (ஜேர்மனி), சோதீஸ்வரி (ஜேஸ்மனி), செல்வகுமார் (சுவிஸ்), ஸ்ரீரஞ்சனி, கலாரஞ்சனி (சுவிஸ்), அமரர் குலேந்திரமோகன், சுரேந்திரன் (சுவிஸ்), அமரர் சுதர்ஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2023) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(CS 23751) 1-6

# 31ஆம் நாள் நினைவஞ்சலி




## திரு. சின்னத்தம்பி இலகுநாதர்

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
எம்மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த உத்தமரே!!
மண்ணோடு உங்கள்
பூவுடல் மறைந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை.

**குடும்பத்தினர்**
**கைதடி கிழக்கு , கைதடி.**
**077 072 4119**
**077 045 5909**

தோற்றம் 11.07.1936 மறைவு 29.01.2023
(CS 49332)(3/6)

# மரண அறிவித்தல்



## நடராசா மகேந்திரராசா

நல்லூர் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் நல்லூர் மற்றும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மகேந்திரராசா நேற்றுமுன்தினம் (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா விசாலாட்சி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு அரியநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், மயூரன், அருணன் (பிரான்ஸ்) கஜாழினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், தனபாலரெட்ணம், இரத்தினராஜா மற்றும் இந்திராதேவி (நீர்கொழும்பு) ஆனந்தராசா, சிவானந்தராசா (பிரான்ஸ்) லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சரஸ்வதி, மற்றும் அருணா, அமுதவல்லி (கனடா), காலஞ்சென்ற கிருஷ்ண தயானந்தம் மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சுபாசினி (லண்டன்), தாலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் விஜயராணி, தர்மானந்தன், உதய குமார், இந்திராணி, ஜெயந்தி, ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும் வளர்மதி, அகிலா (பிரான்ஸ்) பகிரதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷேக், அக்ஷரா, அஜன், அவினா, அனெல்யா (பிரான்ஸ்) அக்ஷியன், சாருயா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2023) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செலப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**261/7, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.**
**076 8310 462 - அருணன்**
**077 0186 699 - மயூரன்**
(CR 39335) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 10 - 1948



மறைவு 27 - 02 - 2023

## நடராசா தேவராணி

காரைநகர் சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும் மில் வீதி, இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும், தற்போது வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தேவராணி அவர்கள் நேற்றையதினம் (27.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை கந்தையாபிள்ளை (கந்தப்பு) பூரணம் தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சுந்தரம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், நடராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், விஸ்வலிங்கம், செல்வரத்தினம் மற்றும் உமாதேவி காலஞ்சென்ற துரைராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியும், பத்மநாதன்(அதிபர்- யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க.வித்தியாலயம், கணித ஆசான் ஐடியல் அக்கடமி), சோதிநாதன்(மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகுதாயாரும், சசிகலா, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லக்ஷிகா, தர்ஷிகா, சாம்பவி, பவனிகா, யதுர்ஷன், மதுஷன், விஹாஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2023) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 2.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**50/18 வைமன் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.**
**077 392 6736**
**077 777 1384**
**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகத் திட்டம்!

முல்லைத்தீவு, பெப். 28
13 ஆண்டுகளாகக் குடிதண்ணீருக்கு அல்லற்பட்டு வந்த கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் குடிதண்ணீர் திட்டம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.
இந்தக் கிராமமக்கள் கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக குடிதண்ணீர் வசதிகளின்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.
தமக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறு அரச அதிகாரிகள் பலருக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் குடிதண்ணீர் தேவை நிவர்த்திக்கப்படவில்லை.
இந்த நிலையில் மக்களின் கோரிக்கைக்கமைய யாழ். தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம நிறுவுநர் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகளின் நிதிப்பங்களிப்பில் குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மக்களிடம் கையளிக்கப்பட்டது.
நிகழ்வில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் நிறுவுநர் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள் மற்றும் அடியவர்கள், முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன், கரைதுறைப்பற்று பிரதேசசபையின் உறுப்பினர்கள், அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ச-19)

## இல்ல மெய்வல்லுநர்

யாழ்ப்பாணம், பெப். 28
அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
பாடசாலை முதல்வர் வே.குணசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

### உள்ளூராட்சி மன்றங்களுக்கு

# சாதி ரீதியாக வட்டாரப் பிரிப்பு நிராகரித்தது ஆணைக்குழு

கொழும்பு, பெப். 28
உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரப் பிரிப்பின்போது சாதி ரீதியாக வட்டாரங்களை பிரிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை எல்லை நிர்ணய ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணய ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இது தொடர்பில் கூறுகையில்;
உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரப் பிரிப்பின்போது சாதிரீதியாக சில வட்டாரங்களைப் பிரிக்குமாறு எம்மிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.
வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் இந்தக் கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கிழக்கு மாகாணத்திலிருந்தே கூடுதலான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.
இந்தக் கோரிக்கைகளை எல்லை நிர்ணய ஆணைக்குழு முற்றாக நிராகரித்துள்ளது.
இதேவேளை 5ஆயிரத்து 092 ஆகக் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை 2900 வரையில் குறைக்கப்படவுள்ளது.
அத்துடன் 8 ஆயிரத்து 800 ஆகக் காணப்படும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 800 ஆகக் குறைக்கப்படவுள்ளது - என்றார். (ச-6)

## தேயிலை தரமிழப்பு ஏற்றுமதியில் வீழ்ச்சி

### பெருந்தோட்டத் துறையினர் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 28
இலங்கையின் தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 19.14 சதவீத வீழ்ச்சியை பதிவுசெய்துள்ளது என பெருந்தோட்டத் துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர். கடந்த ஜனவரி மாதம் மொத்தமாக 19.14 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி இடம்பெற்றது.
கடந்த கால ஆட்சியாளர்களின் தவறான கொள்கை முடிவுகள் மற்றும் சீரற்ற வானிலை ஆகியவை தேயிலை உற்பத்தித் துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
இரசாயன பசளைகளுக்கு விதிக்கப்பட்ட தடை - என்றுமில்லாத விலையுயர்வு உள்ளிட்ட காரணங்களால் தேயிலை போஷாக்கை இழந்துள்ளது.
தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் இரசாயன பசளை பாவிப்பதை கைவிட்டுள்ளதால் தேயிலைக் கொழுந்தின் தரம் குறைந்து காணப்படுகிறது.
நாளுக்கு நாள் தேயிலை உற்பத்தி குறைந்து உலக சந்தையில் எமக்குள்ள இடத்தை ஏனைய நாடுகள் கைப்பற்றும் சூழ்நிலை உருவாகும் என அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (ச-இ)



## யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பேடன்பவல் விருது

யாழ்ப்பாணம், பெப்.28
சாரணர் இயக்கத்தின் பேடன்பவல் பிரபுவின் பிறந்த தினத்தை முன்னிட்டு சாரணர் இயக்கத்தின் இளைஞர் சாரணியப் பிரிவாகச் செயற்படும் திரிசாரணர் பிரிவில் வழங்கப்படுகின்ற உயரிய விருதான பேடன்பவல் விருது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் திரிசாரணர்கள் இருவருக்கு 57 வருடங்களின் பின்னர் வழங்கப்பட்டது.
இலங்கை சாரணர் சங்கத்தினால் மாத்தளை மாவட்ட செயலகத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட விசேட நிகழ்வொன்றிலேயே இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் குறித்த விருதுகளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் திரிசாரணர் குழுவில் சிறப்பாகச் செயற்பட்டு அனைத்துத் தகைமைகளையும் நிறைவு செய்த யோ.சுதர்சனன் மற்றும் ப.சாரங்கன் ஆகியோருக்கு வழங்கிவைத்தார்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 200ஆவது ஆண்டினை இந்த வருடம் கொண்டாடும் நிலையில் இந்த விருது 57வருடங்களின் பின்னர் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ய-125)

## சைவபரிபாலனசபை வளாகத்தில் ஆறுமுகநாவலர் திருவுருவச் சிலை

யாழ்ப்பாணம், பெப். 28
நீராவியடியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை அலுவலகத்தின் முன்பாக சுமார் 4 அடி உயரத்தில் நிறுவப்பட்ட சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலை, நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 200 ஆவது ஆண்டு நினைவு விழாவும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் புண்ணிய நாச்சி அம்மையார் நினைவு விழாவும் சைவபரிபாலனசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன்போதே ஆறுமுகநாவலர் சிலை திறக்கப்பட்டது. (ஒ-14-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புஸ்பராசா நற்பணி மன்றத்தால் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்படும் காத்தவராயன், சிந்து நடைக்கூத்து, கோவலன்கண்ணகி நாட்டுக்கூத்து, அரிச்சந்திரன் மயானகாண்டம், பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம் ஆகிய போட்டிகளுக்கு கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதில் பங்குபற்றும் அண்ணாவிமார்கள், மன்றங்களின் தலைவர் மற்றும் செயலாளர்கள் உள்ளிட்ட ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ஒ-14-19)

## தேவை

தனியார் கல்வி நிறுவனத்திற்கு அனுபவமும் திறமையும் வாய்ந்த எழுதுனர்(Clerk-பெண்)தேவை. யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது,

**தொடர்புகளுக்கு:**
**077 459 8440**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் களஞ்சிய நலன்புரிக்கிளையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு.ந.சோதிநாதன்** அவர்களின் பாசமிகு தாயார்

### நடராசா தேவராணி

அவர்கள் கடந்த 27.02.2023 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(CR 39336)1-6

## பகுதி நேர காவலாளி தேவை



யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் பணிபுரிய காவலாளி தேவை.

கடமை நேரம்

காலை 5.00-7.00 வரை

மாலை6.00-இரவு 10.00 வரை

தொடர்புக்கு

**0771209998**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27.10.1948 மறைவு 27.02.2023

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஸ்தாபகரும், தலைவருமாக இருந்து மன்றத்தின் ஊடாக கலைப் பணிக்கு அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றிவரும் **திரு.நடராஜா சோதிநாதன்** அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி நடராஜா தேவராணி

அவர்கள் காலமானதை அறிந்து நாம் ஆழ்ந்த கவலையடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஶ்ரீசிவகாமி அம்பாள் சமேத தில்லைக் கூத்தனின் திருவடிசேர நாம் அனைவரும் பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கிழவன்காடு கலாமன்றம்,**
**காரைநகர்.**

(CS 23752)1-6

## மரண அறிவித்தல்



### திரு. பிலிப்புபிள்ளை அந்தோனிப்பிள்ளை

**(பிரதி ஆணையாளர் உள்நாட்டு இறைவரி திணைக்களம்)**

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்புபிள்ளை அந்தோனிப்பிள்ளை கடந்த (24.02.2023) வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பிலிப்புப்பிள்ளை ரோசமுத்துவின் அன்பு மகனும், திருமதி மேரி பேணடேற் அந்தோனிப்பிள்ளை(கனடா). விக்ரோறியா அந்தோனிப்பிள்ளை(இளைப்பாறிய ஆசிரியை). காலஞ்சென்ற திருமதி மரியம்மா ஜோக்கம்பிள்ளை(இளைப்பாறிய ஆசிரியை). காலஞ்சென்ற பிலிப்புபிள்ளை சந்தியாப்பிள்ளை( உதவி முகாமையாளர்- ஹற்றன் நஷனல் வங்கி). காலஞ்சென்ற திருமதி அன்னம்மா அந்தோனிப்பிள்ளை(இளைப்பாறிய ஆசிரியை). காலஞ்சென்ற பிலிப்புபிள்ளை கபிரியேற்பிள்ளை(இளைப்பாறிய கிராம சேவை அலுவலர்-சில்லாலை). காலஞ்சென்ற திருமதி மற்றில்டா இம்மானுவேல் வேதநாயகம். திரு பிலிப்புபிள்ளை செலஸ்ரீன்பிள்ளை(இளைப்பாறிய முகாமையாளர்-மெய்கண்டான் அச்சகம்). காலஞ்சென்ற பிலிப்புபிள்ளை பற்றிக் இம்மானுவேல் ஆகியோரின் அன்புச்சோதரரும் ஆவார்.
அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (01.03.2023) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

**தகவல்:**
**திரு.க.நிமலன்-00 440 789 099 8336**
**அருள்திரு.இ.இராஜேஸ்வரன்(செ.தா)- 077 800 1283**

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 05 . 1940



மறைவு 27 . 02 . 2023

### திருமதி சிவநாயகி சின்னத்துரை

யாழ்ப்பாணம் மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவநாயகி சின்னத்துரை அவர்கள் நேற்று (27.02.2023) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு திலகவதி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற (ஓய்வுபெற்ற அதிபர்) தாமோதரம்பிள்ளை சின்னத்துரையின் அன்பு மனைவியும், கேதீஸ்வரன், பவதாரணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சாம்பசிவம், லட்சுமணன், சரவணமுத்து, சின்னக்கண்டு, செல்லம்மா, குலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிவபாக்கியவதி, திருமதி பறுவதசோதி, நாகரத்தினம் (மலேசியா), திருமதி ச.சரஸ்வதி (மலேசியா), அமரர் பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாரீசன்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**மாரீசன்கூடல்,**
**இளவாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23756) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 03 - 1936



மறைவு 27 - 02 - 2023

### சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம்

**(ஓய்வு பெற்ற புகையிரத கணக்காளர்)**

306/4 அரசடி வீதி, கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம் நேற்று (27.02.2023) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் ரஞ்சிதம் அவர்களின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம் செல்லம்மா அவர்களின் மகனும், வில்சன் நேசம்மா அவர்களின் மருமகனும், மோகன், அனிட்டா(ரதி), றோகினி, அரவிந்தன், றொகான், ஜெனற்(ஷாமா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராகினி காலஞ்சென்ற ராஜ்குமார், சொரூபன், நிரோஜினி, நித்தியா, ஜீவா(Paul) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற பாலகிறிஸ்ணன், காலஞ்சென்ற கோபாலகமலாம்பிகை, பாக்கியலட்சுமி, தங்கமணி, காலஞ்சென்ற இராமநாதன் ஆகியோரின் சகோதரனும் எறின், பிரசாந், அனோஜி, றஜன்ந்தி, அபிலாசினி, அஜய், அபிசாயி, தர்சினி, ஜேசன், ஜெவோன் ஆகியோரின் பாட்டனும், அன்றூ, லிஷாலி, பிரயூனன், மேகனா, சட்யு, அர்ஜீன், ஷைனா ஆகியோரின் பூட்டனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்பு:-**
**மோகன்(மகன்)-447 877 389 112**
**ரஜந்தி-041 787 711 329**
**பிரஷாந்-003 366 831 7256**
**ஜீவா(Paul)-001 141 662 47282**
**றோகினி(மகள்)-074 318 6783**
**றொகான்(மகன்)-077 405 0165**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் உற்பத்தியாளரின் விற்பனையும் கண்காட்சியும்

## மாதமொருமுறை மன்னாரில்

மன்னார், பெப். 28

மன்னாரில்உள்ளூர்உற்பத்தியாளர்களின்உற்பத்திகளை ஊக்குவிக்கும்வகையில்பிரதேசமட்டத்தில்ஒவ்வொருமாதமும் கண்காட்சியும் விற்பனையும் நடத்தப்படவுள்ளது.

மன்னார் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவின்ஏற்பாட்டில்இந்தக்கண்காட்சியும்விற்பனையும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வைமன்னார்பிரதேசசெயலாளர்எம்.பிரதீப்நேற்றுத் திங்கட்கிழமை மன்னார் நகர பிரதேச செயலகத்துக்கு முன்பாகக்காணப்படும்மன்னார்நகரசபைக்குச்சொந்தமானவாராந்தசந்தைக்கட்டடத்தில்ஆரம்பித்துவைத்தார்.

அதன்பின்னர் அவர் தெரிவிக்கையில்;

மன்னாரில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க அவர்களின்உள்ளூர்உற்பத்திப்பொருள்களைச்சந்தைப்படுத்த இந்தக்கண்காட்சியும்விற்பனையும்முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் இறுதி திங்கட்கிழமைகளில்இந்தவிற்பனையும்கண்காட்சியும்நடத்தப்படும்-என்றார். (ச-56)



### யாழ். மாநகரசபை...

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் முதல்வர் இ.ஆர்னோல்டால் கடந்த 14ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் ஆதரவாக 16 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் கிடைத்தன. 8 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மணிவண்ணன் அணி என்பன பாதீட்டை எதிர்த்து வாக்களித்திருந்தன. அதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் குத்துவிளக்குச் சின்னத்தில் போட்டியிடும் து.ஈசன், ப.தர்சானந், சுபாதீஸ், சாந்தரூபன் ஆகியோர் சபைக்குச் சமுகமளித்திருக்கவில்லை.

இன்று இரண்டாவது தடவையாக வரவு - செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இன்றும் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமாக இருந்தால் சபை கலையும் என்பதால் வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவுகோரும் முயற்சி தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலரால் நேற்றுத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது என்று அறிய முடிகின்றது.

வரவு - செலவுத் திட்டத்தை கடந்தமுறை எதிர்த்து வாக்களித்த சில உறுப்பினர்கள் இம்முறை வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர். ஆயினும் கடந்தமுறை எதிர்த்து வாக்களித்த உறுப்பினர்களின் கட்சிகளின் உயர்மட்டங்களுடன் பேசியபோது அவர்கள் தங்களது கட்சிகள் வரவு - செலவுத் திட்டத்தை இம்முறையும் எதிர்த்தே வாக்களிக்கும் என்று உறுதிபடத் தெரிவித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கும் என்று கட்சியின் உயர் மட்டங்கள் தெரிவித்தன. 'இந்த வாக்கெடுப்பில் எமது கட்சி உறுப்பினர்கள் நடுநிலைமை வகிப்பார்கள்" என்று புளொட் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். அதேநேரம் தங்களின் அணி வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கும் என்று முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் குறிப்பிட்டார். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கும் என்று கட்சியின் உள்ளக வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தமிழரசுக் கட்சியில் ஒரு சாராரின் தகவல்களின் அடிப்படையில், வாக்கெடுப்பில் 20:20 என்று சமநிலை வரலாம் என்றும் முதல்வர் தனக்குள்ள வாக்குரிமையைப் பயன்படுத்தி வாக்கெடுப்பில் வெற்றிபெறுவார் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, சபையில் அநாகரிகமாகக் கருத்துத் தெரிவித்தார் என்று தெரிவித்து முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் அணியைச் சேர்ந்த ஒருவருக்கு சபை அமர்வில் கலந்துகொள்ளத் தடை விதிக்கப்பட்டிருந்தது. வாக்கெடுப்பை முன்னிலைப்படுத்தியே சபை முதல்வரால் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள அந்த உறுப்பினர், சபை அமர்வில் கலந்துகொள்வேன் என்று அறிவித்துள்ள நிலையில், இன்று அதுவும் ஒரு பிரச்சினையாக மாறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், அந்த உறுப்பினரின் மேன்முறையீட்டுக்கு அமைய நியதிகள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் பிரகாரம் எந்த முடிவும் எடுக்கமுடியாது என்று உள்ளூராட்சி ஆணையாளர் எழுத்துமூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், மாநகர முதல்வர் ஆர்னோல்ட்டுக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு வெளிநாட்டுத் தூதரகமொன்றும் அரசியல்கட்சித் தலைவர்களுக்கு நேற்று இரவுவரை அழுத்தம் கொடுத்ததாகவும் ஒரு தகவல் வெளியானது. எனினும் அதை உறுதிப்படுத்த முடியவில்லை. (அ-ம-26)

### கடை...

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம)

### கிணற்றில்...

வாசிகள் இது தொடர்பில் செட்டிகுளம் பிரதேசசபை மற்றும் வன உயிரிகள் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச் சென்ற அதிகாரிகள், கிராம மக்கள், இளைஞர்களின் உதவியுடன் யானைகளைப் பத்திரமாக மீட்டனர். (அ-ம-110)

### எரிப்பதற்கு...

எரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம் ஆட்கள் வராமையால் பிசுபிசுத்துப்போனது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகளை வவுனியா ஓமந்தையில் எரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், அவ்வாறு எரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக்காலை 8.30 மணியளவில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவிருந்தது. குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் சென்றிருந்தனர். இந்த நிலையில், அங்கு போதிய பொதுமக்கள் வராமையை அடுத்து அவர்கள் ஏற்பாட்டாளர்களை கடிந்த வண்ணம்திரும்பிச்சென்றனர். (அ-ம-110)

### சி.ஐ.டி. என்று...

பிரிவில் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் ஜி.பி.எஸ். வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் சுமார் 75 வயது மதிக்கத்தக்க முதிய தம்பதிகள் வாழ்ந்து வரும் நிலையில், நேற்றுமுன்தினம் இரவு தன்னை சி.ஐ.டி. என்று அடையாளப்படுத்தி நபரொருவர் அங்கு சென்று, அந்தத் தம்பதிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுள்ளார். தொடர்ச்சியாக பல்வேறு விசாரணைகளை மேற்கொள்வது போன்று பாசாங்கு செய்துவிட்டு அலுமாரிக்குள் இருந்த 38 பவுண் நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம,26,125)

### பொலிஸாரின்...

மேற்கொண்ட தாக்குதலில் படுகாயமடைந்த நிமல் அமரசிங்க (வயது - 61) என்ற நபர் உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல பிரதேசசபைக்கான, ஜே.வி.பியின் வேட்பாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தில் பலத்த காயமடைந்த இவர், கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். (அ-ம-22)

### போதைப்...

வவுனியா மகா இறம்பைக்குளம் பகுதியில் போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று வருவதாக வவுனியா போதைத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-110)

### கிணற்றுக்குள்ளிருந்து...

கரவெட்டிப் பகுதியில், கிணற்றுக்குள் இருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வேலுப்பிள்ளை பொன்னையாபிள்ளை (வயது - 65) என்ற முதியவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். முதியவர் நேற்றுமுன்தினம் முதல் காணாமற்போயிருந்த நிலையில் அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே அவர் கிணற்றுக்குள் இருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணையை கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மேற்கொண்டதுடன் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மந்திகை ஆதார மருத்துவமனையில் பாரப்படுத்தப்பட்டது. (அ-ம-26)

### மூளைக்...

மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமியொருவர், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். அஜிந்தன் லக்ஸ்மிதா (வயது-4) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் புத்தூர் கிழக்கு - ஊறணி பகுதியைச் சேர்ந்த இந்தச் சிறுமி கடந்த சிவராத்திரி தினத்தன்று திடீரென வாந்தியெடுத்து சுகவீனமடைந்த நிலையில், அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம,20,26)

### 45 நாள்களேயான...

பிறந்து 45 நாள்களேயான விஜயகுமார் நாகவேலவன் என்ற ஆண் சிசு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளது.

வழக்கம்பரை பண்ணாகத்தைச் சேர்ந்த இந்தச் சிசு நேற்றுமுன்தினம் இரவு பால் குடித்ததை அடுத்து மயக்கமடைந்துள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. எனினும், சிகிச்சை பயனளிக்காத நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது. இறப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

### தேர்தல்...

மேற்கொள்ளப்படும் என்று சுதந்திர மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லாது செய்யப்பட்டுள்ளது. போராட்டம் இல்லை, ஆர்ப்பாட்டங்கள்கூட நடத்துவதற்கு அனுமதி இல்லை. இந்த நிலைமை ஆபத்தானது. தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை எனக்கூறும் அரசு, வேறு நிகழ்வுகளை நடத்தி பணத்தைச் செலவழிக்கின்றது. நாட்டைக் கொண்டு நடத்துவதற்கு ஒன்றரை நாளுக்குச் செலவாகும் பணம்தான் தேர்தலை நடத்த அவசியம். அதனை வழங்கலாம். ஆனால், நிதி அமைச்சின் செயலாளர் மறுக்கின்றார். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைக்குறிச்சி சர்வோதயா முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் க.சுதாகர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் உ. தனசங்கர், தம்பு செல்வக்குமார், பனை தென்னை வள அபிவிருத்திச்சங்கக் கணக்காளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ய-159)

## வைக்கோல்களை எரிப்பது மண் வளத்தைப் பாதிக்கும்

கிளிநொச்சி, பெப். 28

அறுவடையின் பின்னர் வைக்கோல்களை எரிப்பதால் மண்ணின் பசளைத்தன்மை குறைவடைந்து மண் வளம் பாதிக்கப்படுகின்றது. இதனால் வைக்கோல்களை எரிக்கவேண்டாம் என்று கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்பினரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

வைக்கோல்களை எரிப்பதால் மண்ணின் பசளைத் தன்மை குறைவடைகின்றது. நிலப்பண்படுத்தலின் போது வைக்கோலுடன் சேர்த்து வயலைப் பண்படுத்தும் போது வைக்கோல் மண்ணின் வளத்தைக் கூட்டுகின்றது. நோய்த்தாக்கம் காணப்பட்ட வயல் நிலங்களில் தீ மூட்டலாம். அதற்காக எல்லோரும் வயலை எரிக்காமல் நிலப்பண்படுத்தலின்போது வைக்கோலையும் பயன்படுத்துங்கள் என சிறுபோக நெற்செய்கைக் கூட்டங்களில் அதிகாரிகளால் அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதேவேளை கால்நடைகளுக்கான உணவாக மட்டும் பயன்படுத்துவதற்காகவே வயல் நிலங்களில் இருந்து வைக்கோல் வெளி இடங்களுக் கு கொண்டு செல்வதை விவசாயிகள் உறுதிசெய்ய வேண்டும் என அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

(14-13)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தி அருகாமையில் A-9 வீதியிலிருந்து 150 M தூரத்தில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 43 65 814
076 48 54 390

(CS 23737) 1-6

### காணி விற்பனைக்கு

நுணாவில் (A9) பிரதான வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும். (தரகர் தேவையில்லை) மேலதிக விபரங்கள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். நேரில் சந்திப்பதற்கான நேர ஒழுங்கு மட்டும் T.P தொடர்பாடல் பயன்படுத்தப்படும். உங்கள் பொன்னான நேரத்தை வீணடியாதீர்கள்.

காணி உரிமையாளர்:- 076 690 6272

(CS/23674)4,6

### விற்பனைக்கு

KM - XXXX இலக்க நல்ல நிலையில் உள்ள டிப்பர் வாகனம் விற்பனைக்குண்டு.

076 163 3176

### Physics A/L Day Batch

ஆரம்பம் :- 01.03.2023
புதன் - 2.30pm - 3.30pm

- முழுமையான பாடத்திட்ட மீட்டலும்
- கடந்தகால வினாவிடையும்

ஆசிரியர்
திரு. M.Spellmen (B.Sc PGDE)

இடம்:- பெரியகோயிலுக்கு அருகில் 10/10 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

- A/L - 2023 இற்கு வெப்பவியல் நடைபெறுகிறது.
- A/L - 2024 இற்கு பொறியியல் நடைபெறுகிறது.
- Group Class ஆக எடுக்க விரும்பும் மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

077 611 6724

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 80 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும்.
- 02 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 46 50 171, 076 911 9371

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 44 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரத்தில்.
- புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காப்பெற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வீதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 4350 614, 077 6385 683

(CS 23733) 1-6

### வெளிநாடு செல்ல ஆர்வமுள்ளோர்களுக்கான இலவச மற்றும் சிறந்த முறை வழிகாட்டல் கருத்தரங்கு

CHER

FREE GUIDANCE SEMINAR

IELTS

Limited Seats only

திகதி :- 05.03.2023 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- 09.00 - 11.00 am
இடம் :- இல.131, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

இக்கருத்தரங்கின் மூலம், கீழ்வரும் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- IELTS (Academic, General, Life Skills)
- Work Permit
- Student Visa
- Sponsership Visa

Free Entrance

இருக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் 04.03.2023 இற்கு முன்னர் முன்பதிவு செய்து உங்கள் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

021 221 0604 / 077 800 5204

No. 131, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாவடி, கொக்குவிலை பிறப்பிடமாகவும் உயரப்புலம் மற்றும் இங்கிலாந்தினை வாழ்விடமாகவும் கொண்ட

### அமரர் திரு. கந்தையா கந்தப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யா/ இந்துக்கல்லூரி)

அவர்களின் மறைவின் முதலாம் ஆண்டின் நினைவு நாள் 02.03.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு இல-82 உயரப்புலம், ஆனைக்கோட்டையில் (உத்துங்க விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில்) அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும்,நினைவு அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு : சிறிரஞ்சன் - 077 187 9195
அனபாயன் - 077 956 0249
பார்த்திபன் - 074 054 8364

கந்தப்பிள்ளை குடும்பத்தினர்

(CS 49281) (3/6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23 . 12 . 1950



இறப்பு 11 . 03 . 2022

### அமரர் திரு. சிவசம்பு பாலச்சந்திரன்

மனையாள் பிணிதீர்க்க
மனஞ்சளைக்காதுழைத்தவரே அப்பா
மைந்தனை உயர்த்தி
மனதால் அழகு பார்த்தவரே!

அறுவடை வரும் நேரம்
அருவமாய் அகன்றதேன் – அப்பா
அரைவழியில் தவிக்கவிட்டு
அவசரமாய்ப் போனதேன்?

ஆதரித்து எம்மைக் காத்த
ஆருயிரே எங்கள் அப்பா
ஆண்டொன்று போனாலும்
ஆறவில்லை எம்துயரம்!

நீளுலகில் வாழ்வு
நிஜமில்லை என்றாலும்
நினைவில் நிலைத்திருப்பீர்!
நீங்காது நாம் உள்ளமட்டும்.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

(CS/23650)4.6

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.